அரசுத்தேர்வுகள் இயக்ககம் சென்னை – 6.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச்–2025

கணினி அறிவியல் – விடைக்குறிப்புகள் (தமிழ் வழி)

மொத்த மதிப்பெண்கள் : 70

குறிப்பு :

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. பகுதி–1ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 15 × 1 = 15

| வினா எண் | குறியீடு | விடை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | இ | வரையறை | 1 |
| 2 | அ | Constructors | 1 |
| 3 | ஆ | LEGB | 1 |
| 4 | இ | பாதி இடைவெளித் தேடல் | 1 |
| 5 | ஆ | மும்ம செயற்குறி | 1 |
| 6 | அ | for | 1 |
| 7 | ஈ | return | 1 |
| 8 | அ | நேர்மறை அல்லது எதிர்மறை எண்கள் | 1 |
| 9 | அ | ecneicS retupmoC | 1 |
| 10 | ஈ | . | 1 |
| 11 | ஆ | Chen | 1 |
| 12 | ஆ | SELECT | 1 |
| 13 | அ | மாற்றம் செய்தல் | 1 |
| 14 | ஆ | OS கூறுநிலை | 1 |
| 15 | ஆ | Distinct | 1 |

## பகுதி – II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி, கேள்வி எண்: 24க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 6 × 2 =12

| | | |
|---|---|---|
| 16 | • இரு மதிப்புகளை ஒன்றாக இணைக்கும் முறையை இணைகள் (pairs) என்று அழைக்கிறோம்.<br>எ–கா<br>Lists (அல்லது) ஏதேனும் ஒரு தகுந்த எடுத்துக்காட்டு | 1<br><br>1 |
| 17 | • ஒரு குறிப்பிட்ட முறையில் வழிமுறைகளைப் பயன்படுத்தி உருப்படிகளை வரிசைப்படுத்துதல் வரிசையாக்கம் என்று பெயர்.<br>(அல்லது)<br>• பட்டியலில் உள்ள உருப்படிகளை ஏறுவரிசை அல்லது இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தும் செயல் வரிசையாக்கம் எனப்படும். | 2 |
| 18 | வெளியீடு<br>5 10 15 | 2 |
| 19 | மூலச்சரத்தில் உள்ள ஒரு துணைச்சரம். சரத்தின் ஒரு பகுதி [ ] என்பது துண்டு (Slice) அல்லது பிரித்தல் செயற்குறி ஆகும். | 2 |
| 20 | இனக்குழுவில் உருவாக்கப்பட்ட பொருளின் பயன்பாடு முடிவுக்கு வரும் போது அழிப்பி என்னும் சிறப்பு செயற்கூறு தானாகவே இயங்கும். | 2 |
| 21 | • அட்டவணையை உருவாக்க – DDL (தரவு வரையறை மொழி) (CREATE)<br>• அட்டவணையில் மதிப்புகளை சேர்க்க – DML (தரவு கையாளுதல் மொழி). (INSERT) | 1<br>1 |
| 22 | கோப்புறையை மாற்றுவதற்கு "cd" (change directory) கட்டளை பயன்படுகிறது.<br>ஏதேனும் ஒரு தகுந்த எடுத்துக்காட்டு | 2 |
| 23 | Pip பயன்படுத்தி matplotlib யை நிறுவ முடியும். | 2 |
| 24 | வெளியீடு<br>False<br>welcome | <br>1<br>1 |

## பகுதி – III

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி ,

வினா எண் : 33 க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 6 ×3=18

<table>
<tr><td>25</td><td>• செயற்கூறுக்கு அளபுருக்களை அனுப்பாத போதும், செயற்கூறின் உள்ளே உள்ள மாறியானது பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.<br>• ஒரு செயற்கூறு அந்த வரையறை தொகுதியின் வெளியே உள்ள மாறிகள் அல்லது செயற்கூறுகளைச் சார்ந்து இருந்து ஒவ்வொரு முறை அழைக்கும் பொழுதும் செயற்கூறு ஒரே மாதிரியாக இயக்கப்படும் என கூற இயலாது.<br>எடுத்துக்காட்டாக, random() என்ற கணித செயற்கூறு ஒரே மாதிரியான அழைப்புக்கூற்றுக்கு வெவ்வேறு விதமான வெளியீடுகளைக் கொடுக்கும்.</td><td>3</td></tr>
<tr><td>26</td><td>முழுதளாவிய வரையெல்லை<br>i) அனைத்து செயற்கூறுகளுக்கும் மேலாக அறிவிக்கப்படும் மாறி முழுதளவிய மாறி எனப்படும்.<br>ii) முழுதளாவிய வரையெல்லை உடைய மாறியை நிரலின் எந்த பகுதியிலும் அணுகமுடியும்.<br>ஏதேனும் ஒரு தகுந்த எடுத்துக்காட்டு</td><td>3</td></tr>
<tr><td>27</td><td>மதிப்பிருத்தல் செயற்குறிகள்<br>• =<br>• +=<br>• −=<br>• *=<br>• /=<br>• %=<br>• **=<br>• //=</td><td>3</td></tr>
<tr><td>28</td><td><table><tr><th>Ceil()</th><th>floor ()</th></tr><tr><td>x–யை விட பெரிய அல்லது x-க்கு நிகரான சிறிய முழு எண்ணைத் திருப்பி அனுப்பும்.</td><td>x–யை விடக்குறைவான அல்லது x–க்கு நிகரான பெரிய முழு எண்ணைத் திருப்பி அனுப்பும்.</td></tr></table></td><td>3</td></tr>
<tr><td>29</td><td>(i). List.remove(element)<br>(ii). List.pop(index of an element) (அல்லது) List.pop()<br>(iii). List.clear()</td><td>1<br>1<br>1</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30 | • இரண்டு தொடர்புகளை சேர்க்க குறுக்குப் பெருக்கல் வழிவகுக்கிறது. இதன் விடை இரண்டு தொடர்புகளின் இணைப்பைக் கொண்டுள்ளது.<br>ஏதேனும் ஒரு தகுந்த எடுத்துக்காட்டு | 3 |
| 31 | • Reader பட்டியல் (list/tuple) பதிவுடன் வேலை செய்யும்.<br>• DictReader அகராதியில் வேலை செய்யும். | 3 |
| 32 | **fetchone()**<br>• fetchone() செயற்கூறு வினவல் முடிவுத் தொகுதியின் உள்ளே உள்ள அடுத்த வரிசையைக் கொடுக்கும்.<br>• எந்த வரிசையும் இல்லை என்றால் None என்ற மதிப்பை கொடுக்கும்.<br>**fetchmany()**<br>• குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பதிவுகளைக் காண்பிக்க fetchmany() செயற்கூறு பயன்படுகிறது.<br>• இந்த செயற்கூறு முடிவுத் தொகுதியில் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையில் பதிவுகளை திருப்பும். | 3 |
| 33 | வெளியீடு<br>[1,4,9,16,25] | 3 |

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5 × 5 =25**

**34 அ)**

| Pure | Impure |
|---|---|
| செயற்கூறுவின் திருப்பி அனுப்பும் மதிப்பு முற்றிலும் செயலுருபுருகளை பொறுத்தே அமையும். | செயற்கூறுவின் திருப்பி அனுப்பும் மதிப்பு முற்றிலும் செயலுருபுருகளை பொறுத்து அமையாது, |
| pure செயற்கூறினை அதே செயலுருபுருகளை கொண்டு அழைத்தால் எப்பொழுதும் அதே திருப்பி அனுப்பும் மதிப்பு கிடைக்கும். | impure செயற்கூறினை அதே செயலுருபுருகளை கொண்டு அழைத்தால் வெவ்வேறான திருப்பி அனுப்பும் மதிப்பு கிடைக்கும். |
| இது எந்த பக்க விளைவுகளையும் கொண்டிருக்காது | பக்க விளைவை ஏற்படுத்தும் |
| இந்த செயலுருபுகளை மாற்றம் செய்ய இயலாது | இந்த செயலுருபுகளை மாற்றம் செய்ய இயலும் |

(ஏதேனும் தகுந்த எடுத்துக்காட்டு) — 5

(அல்லது)

| | | |
|---|---|---|
| 34 ஆ) | தரவுதள மாதிரியின் வகைகள்<br><br>1. படிநிலை தரவுதள மாதிரி (Hierarchical Model)<br>2. உறவுநிலை தரவுதள மாதிரி (Relational Model)<br>3. வலையமைப்பு தரவுதள மாதிரி (Network Model)<br>4. ER தரவுதள மாதிரி (Entity Relationship Model)<br>5. பொருள்நோக்கு தரவுதள மாதிரி (Object Model)<br><br>மேற்கண்டவற்றை விளக்குக | 2<br><br><br><br><br><br><br>3 |
| 35 அ) | பல்வேறு வகையான செயற்குறிகள்<br><br>1. கணித செயற்குறிகள்<br>2. உறவு நிலை அல்லது ஒப்பிட்டு செயற்குறிகள்<br>3. தருக்க செய்குறிகள்<br>4. மதிப்பிருத்தல் செயற்குறிகள்<br>5. நிபந்தனை செயற்குறி<br><br>மேற்கண்டவற்றை விளக்குக<br><br>(அல்லது) | 2<br><br><br><br><br><br>3 |
| 35 ஆ) | 1. UNIQUE கட்டுப்பாடு – நெடு வரிசைகளில் எந்த இரு வரிகளும் ஒரே மதிப்பை கொண்டிருக்காது<br>2. PRIMARY KEY கட்டுப்பாடு – ஒரு பதிவை தனித்தன்மையோடு அடையாளம் காட்ட<br>3. DEFAULT கட்டுப்பாடு – ஒரு புலத்தில் கொடாநிலை மதிப்புகளை இருத்தி வைக்க<br>4. CHECK கட்டுப்பாடு – ஒரு புலத்திற்கான மதிப்பின் வரம்பை நிர்ணயிக்க<br>(மேற்கண்டவற்றை விளக்குக) | 5 |
| 36 அ) | **while** மடக்கு<br>while <condition>:<br>Statement block 1<br>【else:<br>Statement block 2】<br>உரிய விளக்கம்<br><br>(ஏதேனும் ஒரு தகுந்த எடுத்துக்காட்டு)<br><br>(அல்லது) | 2<br><br><br><br>2<br><br><br>1 |

| | | |
|---|---|---|
| 36<br>ஆ) | கோப்பு முறைமைகள்<br>• **'r'**- படிப்பதற்கு மட்டுமே ஒரு கோப்பினை திறக்கும் (தானமைவு நிலை)<br>• **'w'** - கோப்பில் தரவுகளை எழுதுவதற்கு திறக்கும் குறிப்பிட்ட கோப்பு இல்லையெனில் புதிய கோப்பினை உருவாக்கும். கோப்பில் தரவுகள் இருப்பின் அழிக்கப்படும்.<br>• **'x'** – தனித்துவமான கோப்பினை திறக்கும்<br>• **'a'** – கோப்பின் தரவுகளை அழிக்காமல் அதன் இறுதியில் புதிய தரவுகளை சேர்ப்பதற்கு திறக்கும். குறிப்பிட்ட கோப்பு இல்லை எனில் புதிய கோப்பினை உருவாக்கும்<br>• **'t'** –உரைமுறையில் கோப்பு திறக்கும் (தானமைவு நிலை)<br>• **'b'**- இரும நிலை முறைமையில் கோப்பினை திறக்கும்<br>• '+' – புதுப்பிப்பதற்காக கோப்பினை திறக்கும் | 5 |
| 37<br>ஆ) | தற்சுழற்சி செயற்கூறு<br>• ஒரு செயற்கூறு தன்னைத்தானே அழைத்தால் அது தற்சுழற்சி என்றழைக்கப்படும். ஒரு செயல்முறை காலவரையின்றி நிறுத்தப்படாமல் செயல்பட்டால் அது முடிவிலா சுழற்சி (Infinite iteration) எனப்படும். தற்சுழற்சி செயற்கூறில் கொடுக்கப்படும் நிபந்தனை அடிப்படை நிபந்தனை எனப்படும்.<br>தற்சுழற்சி செயற்கூறு எவ்வாறு செயல்படும்<br>1. தற்சுழற்சி செயற்கூறு வெளிபுற குறிமுறையிலிருந்து அழைக்கப்படும்.<br>2. அடிப்படை நிபந்தனை நிறைவேற்றப்பட்டால் நிரலானது சரியான வெளியீடு கொடுத்து வெளியேறும்.<br>3. இல்லையெனில், செயற்கூறு தேவையான செயற்பாட்டை இயக்கும் மேலும் தற்சுழற்சி முறையில் தன்னைத் தானே அழைத்துக் கொள்ளும்.<br>(பொருத்தமான எடுத்துக்காட்டு)<br>(அல்லது) | 2<br>2<br>1 |
| 37<br>ஆ) | **sys** கூறுநிலை<br>• இது வரிமொழி மாற்றியால் பயன்படுத்தப்படுகிறது<br>• sys. argv – பைத்தான் நிரலுக்கு அனுப்பி வைக்கப்படும் கட்டளை வரி செயல் உறுப்புகளின் பட்டியல் ஆகும்.<br>• sys. argv[0] முதல் செயலுருபு செயல்படுத்த வேண்டிய நிரலின் பெயர் .<br>• sys.argv[1] செயலுருபு நிரலுக்கு அனுப்பப்படும் முதல் செயலுருபு ஆகும் | 5 |

| | | |
|---|---|---|
| | **os கூறுநிலை**<br>• இயக்க அமைப்பு சார்பு செயல்பாட்டுடன் பயன்படுத்துவதற்கு வழிமுறை<br>• விண்டோஸ் இயக்க முறைமையுடன் os கூறு நிலை ஊடாட அனுமதிக்கும்<br>os.system('g++' + <variables name1> + '- <module>' + <variable name2>)<br>**getopt கூறுநிலை**<br>கட்டளை வரி தேர்வுகளையும் செயலுருபுகளையும் பிரித்தெடுக்க உதவும்.<br>getopt.getopt இந்த செயற்குழு கட்டளை வரி தேர்வுகளையும் அளப்பருக்களின் பட்டியலையும் பிரித்தெடுக்கும்<br><opts>,<args>=getopt.getopt(argv, options, [long_options]) | |
| 38 அ) | வெளியீடு<br>{1, 2, 3, 4, 5, 6, 7, 8}<br>{4, 5}<br>{1, 2, 3}<br>{8, 6, 7}<br>{1,2,3,6,7,8}<br>(அல்லது) | 1<br>1<br>1<br>1<br>1 |
| 38 ஆ) | மதிப்பீட்டுச் சார்புகள்<br>• AVG( ) – சராசரியை கண்டுபிடிக்கும்<br>• COUNT( ) – அட்டவணையில் உள்ள வரிசைகளின் எண்ணிக்கையை விடையாக கொடுக்கும்<br>• SUM( ) - கூட்டுதொகையை கணக்கிடும்<br>• MAX( ) -நெடுவரிசையில் உள்ள மிகப்பெரிய மதிப்பை விடையாக கொடுக்கும்.<br>• MIN( ) - நெடுவரிசையில் உள்ள மிகசிறிய மதிப்பை விடையாக கொடுக்கும். | 1<br>1<br>1<br>1<br>1 |